தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

தழின் உள்ளே....


- ஆசிரியருரை
- உலக அளவில் பிரசித்திபெற்ற J.C.சோட் அவர்களின் செய்தி
- பெண்களுக்கான பகுதி
- சிறுவர்களுக்கான பகுதி
- வேத அறிவுப் போட்டி
- நாதன் அவர்களின் சரித்திர ஆய்வு
- நாளும் நடப்பும்

ஆசிரியர்
B.அர்ஜுனன்

மரம் 7 2007 நவம்பர் கனி 12

## இவருக்குச் செவி கொடுங்கள் [லூக்.9:35- தேவன்]


**நானே**
**வழியும்**
**சத்தியமும்**
**ஜீவனுமாயிருக்கிறேன்**
**(யோவா.14:6-இயேசு)**




- *இரட்சிப்பின் விஷயத்தில்*
  *- கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!*
- *கோட்ப்பாட்டின் விஷயத்தில்*
  *- கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!*
- *ஐக்கியத்தின் விஷயத்தில்*
  *- கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!*
- *அதிகாரத்தின் விஷயத்தில்*
  *- கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!*
- *ஆராதனை விஷயத்தில்*
  *- கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!*
- *சபையின் விஷய்த்தில்*
  *- கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!*
- *நித்தியத்தின் விஷயத்தில்*
  *- கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!*

**கிறிஸ்துவின் சபையார் வழங்கும்**
**கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சி**

**செய்தியாளர்**
**B.அர்ஜூனன்**





**உங்கள் WIN TV -யில் ஒவ்வொரு வாரமும் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 6.15 முதல் 6.30 மணி வரை பாருங்கள். மேலும்**

**உங்கள் வானொலியில் இலங்கை ஆசிய சேவை SW 25,41 மீட்டரில், ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரையும் மேலும் கொழும்பு சர்வேதேச ஒலிபரப்பு MW 873 Khz-ல் காலை 8.50 முதல் 9.05 மணி வரையும் கேளுங்கள்.**




**THE WORD OF CHRIST**
**P.O.BOX.5**
**BATLAGUNDU -624 202 S.INDIA**

**Phone: 04543 263278 Mobile: 9443558041**

"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# திவேர்ட் ஆப் கிறைஸ்ட்

## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் – 7 நவம்பர் – 2007 கனி – 12


ஆசிரியருரை

## பாரம்பரியம் நம்மை இரட்சிக்குமா?

## Will Tradition Save Us?



பாரம்பரிய பழக்கங்கள் இன்று அநேக மனிதர்களைக் கட்டிவைத்திருக்கிறது. பாரம்பரியம் ஒருபோதும் மனிதனை இரட்சிக்காது. இதனால் தேவனுடைய இரட்சிப்புக்கேற்ற கற்பனையை மனிதன் அறியாது போகிறான். இயேசு தம்மிடத்தில் வந்த வேதபாரகர் மற்றும் பரிசேயரைப் பார்த்து: "உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கிவருகிறீர்கள்" என்றார் (மத்.15:6). எவ்வளவு உண்மையான வார்த்தை பாருங்கள்! இன்று அநேகர் பாரம்பரியங்களைக் கைக்கொண்டு தேவனுடைய கற்பனைகளை அவமாக்கிப்போடுகிறார்கள். இப்படிச் செய்வதற்கான காரணம் என்னவென்று நாம் கீழுள்ள வசனங்களைப் படிக்கும்போது; இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறானே என்றார்.

அன்பானவர்களே, இன்றைய பாரம்பரிய மக்களிடம் இவைகளை நாம் காணமுடிகிறது. உதடுகளினால் தேவனை ஆராதிக்கிறார்கள். அவர்களுடைய இருதயம் கர்த்தருக்கு ஏற்றதாக இல்லை. மேலும் மனுஷனுடைய கற்பனைகளும் கட்டளைகளும் அங்கே காணப்படுகிறது. அவைகள் எல்லாம் முதல் நூற்றாண்டிலே மனிதர்களைப் பின்பற்றும்படி எழும்பின தெயுதாஸ், மற்றும் யூதாஸ் போன்றோரால் ஏற்படுத்தப்பட்ட

கற்பனைகளாகவும் கட்டளைகளாகவும் இருக்கிறது. அவர்கள் ஒழிந்தவுடன் அவர்கள் ஏற்படுத்தின மார்க்கமும் ஒழிந்தது. அந்தவிதமாக இன்று மனிதனால் ஏற்படுத்தப்பட்ட அநேக மதம் என்று சொல்லப்படுகிற மார்க்க பாரம்பரியங்களைப் பிடித்துக்கொண்டு அதை நாம் எதற்காக செய்கிறோம்? ஏன் செய்கிறோம்? அதற்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? என்ற கேள்விகளை எழுப்பாமல் தொடர்ந்து அதைச் செய்து கொண்டு வருகிறார்கள். அதனால் அவர்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்படுமா? பாரம்பரிய பழக்கவழக்கங்கள் முதலும் முடிவும் இல்லாதவைகள். அவைகளை நம்பி ஏமாந்து போய்விடாதீர்கள். முதலாவது வேதத்தின் பக்கம் உங்கள் சிந்தனையை திருப்பும்படியாக உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை" என்று வானத்தையும் பூமியையும் உண்டாக்கின இயேசுகிறிஸ்து சொல்லுகிறார் (லூக்.21:33). நாம் பார்க்கிற இவைகள் எல்லாம் ஒருநாள் அழிந்துபோம் ஆனால் கர்த்தருடைய வசனங்களோ ஒருக்காலும் ஒழிந்துபோகாது. அந்த வார்த்தை வல்லமையுள்ள வர்த்தை, அதை நாம் விசுவாசிக்கும்போது அது நமக்குள்ளே புதிய பெலத்தை கொண்டுவரும். பாரம்பரிய பழக்கங்களோ ஒன்றுக்கும் உதவாமற்போகும் சாரமற்ற உப்பைப் போலாகும்.

பாரம்பரிய பழக்கத்தை உடையவர்கள் நாங்கள் பரம்பரை பரம்பரையாக இந்த பக்தியின் மார்க்கத்தில் இருக்கிறோம் என்று சொல்லி பெருமையடித்துக்கொள்வார்கள். நம்முடைய தாத்தா நல்ல வழியில் நடந்ததால் நாம் இரட்சிக்கப்பட முடியாது? ஏனென்றால், பரிசேயரிலும் சதுசேயரிலும் அநேகர் யோவான்ஸ்நானகனிடம் ஞானஸ்நானம் பெற வந்து ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று சொன்னார்கள். அதற்கு அவன்: "மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள். ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லிக்கொள்ள நினையாதிருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிராமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இப்பொழுதே கோடாரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்" என்கிறான் (மத்.3:9,10). நாம் ஆபிரகாமின் பிள்ளைகளானாலும், யாக்கோபின் பிள்ளைகளானாலும் மனந்திரும் புதலுக்கு ஏற்ற கனிகொடுக்க வேண்டும். இல்லையேல் வெட்டுண்டு அக்கினியில் போடப்படுவோம் என திருவசனம் நம்மை எச்சரிக்கிறது. விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு இந்தக் கல்லுகளினாலே பிள்ளைகளை உண்டு பண்ண கர்த்தர் வல்லவராயிருக்கிறார் என்பதை நாம் முதலாவது அறிந்துகொள்ளவேண்டும். குறிப்பாக இதை பாரம்பரியத்தைக் கைக்கொள்ளும் மக்களுக்கு யோவான் எடுத்துரைக்கிறார்.

ஏலியின் பிள்ளைகளை அறிவீர்கள். அவர்கள் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; அவர்கள் கர்த்தரை அறியவில்லை. ஏலி கர்த்தருடைய பணியைச் செய்கிற ஒரு ஆசாரியன். ஆனால் அவனுடைய குமாரர்களோ கர்த்தரை அறியவில்லை. இன்றைக்கு இப்படிப்பட்ட குடும்பங்கள் நிறைய இருக்கிறது. இவர்கள் எல்லாம் தங்கள் தகப்பன் ஒரு போதகர் என்று பெருமையாக சொல்லிக்கொள்ளும் கூட்டுக் குடும்பத்தார்கள். ஆனால் கர்த்தருடைய கட்டையின்படியும், கற்பனையின்படியும் ஒருநாளும் நடக்கமாட்டார்கள். ஏலியின் பிள்ளைகளுடைய பாவம் கர்த்தருடைய

சந்நிதியில் மிகவும் பெரிதாயிருந்தது; மனுஷர் கர்த்தரின் காணிக்கையை வெறுப்பாய் எண்ணினார்கள். ஏனென்றால், ஏலியின் பிள்ளைகள் பலவந்தமாய் கர்த்தருடைய காணிக்கையை எடுத்துக்கொண்டார்கள். இதை அறிந்த ஏலி தன்னுடைய பிள்ளைகளை "என் குமாரரே, வேண்டாம்; நான் கேள்விப்படுகிற இந்தச் செய்தி நல்லதல்ல; கர்த்தருடைய ஜனங்கள் மீறி நடக்கிறதற்குக் காரணமாயிருக்கிறீர்களே. மனுஷனுக்கு விரோதமாக மனுஷன் பாவஞ்செய்தால், நியாயாதிபதிகள் அதைத் தீர்ப்பார்கள்; ஒருவன் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்வானேயாகில், அவனுக்காக விண்ணப்பஞ்செய்யத்தக்கவன் யார் என்றான்; அவர்களோ தங்கள் தகப்பன் சொல்லைக் கேளாமற்போனார்கள்; அவர்களைச் சங்கரிக்கக் கர்த்தர் சித்தமாயிருந்தார்" (1சாமு.2:24,25).

ஆகையால், அன்பானவர்களே தகப்பனுடைய நீதி நம்மை தப்புவிக்காது. அதேபோல தகப்பனுடைய பாவம் நம்மை பற்றிக்கொள்ளவும் செய்யாது. ஏனெனில், "இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள்; தகப்பனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது; பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்" என்கிறார் (எசே.18:4). நாம் சென்ற வாழ்நாட் காலத்திலே புறஜாதிகளுடைய இஷ்டத்தின்படி நடந்து கொண்டபோது; அப்பொழுது நாம் காமவிகாரத்தையும் துர் இச்சைகளையும் நடப்பித்து, மதுபானம் பண்ணி, களியாட்டுச் செய்து, வெறிகொண்டு, அருவருப்பான விக்கிரகாராதனையைச் செய்துவந்தோம். இப்பொழுது அந்த பாரம்பரிய பழக்க வழக்கத்திலிருந்து விடுவிக்கப்படுகிறோம். எப்படியென்றால், உலகத்தின் பாவத்தை மீட்க வந்த இயேசுவில் விசுவாசம் கொண்டு அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொள்கிறோம்.

சுவிசேஷத்தை கேட்டதினால் இரட்சிப்பு வருகிறது. "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்" (எபே.1:13). இந்தவிதமான பாக்கியம் நம்முடைய பாரம்பரியத்தினால் நமக்கு கிடைக்கவில்லை. நாம் சுவிசேஷத்தைக் கேட்டதினாலே வருகிறது. நீங்கள் இந்த சுவிசேஷத்தைக் கேள்விப்படவில்லை என்றால், இன்றே கேள்விப்பட்டு இரட்சிக்கப்பட முயற்சி எடுங்கள். கேள்விபடுதலோடு நின்றுவிட்டால் போதாது, இந்த சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெறவேண்டும். "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்.16:16).

மேலும், கிருபையினாலே இரட்சிப்பு வருகிறது. "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்து தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார், கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார். கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால்

உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல;" (எபே.2:4–9). இது தேவனுடைய திட்டம். இந்த திட்டத்தின்படி நீங்கள் இரட்சிக்கப்பட்டால் நித்தியமான வாழ்வை கர்த்தராலே பெறுவீர்கள். மற்றபடி உங்களுடைய விசுவாசம் வீணாய் போய்விடும். நம்முடைய தானதர்மங்களோ புண்ணியங்களோ நம்மை இரட்சிக்காது. பலர் இதற்காகவே பல புண்ணியங்களை செய்கிறார்கள். கர்த்தருடைய வசனம் மிக தெளிவாக நமக்கு போதிக்கிறது. என்னவென்றால், "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்" (தீத்.3:5). தேவனோ உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல் தமது மிகுந்த இரக்கத்தினாலே அவருடைய திருவசனத்தின் மூலமாக அதாவது "அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே. மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே" என்கிறார் பேதுரு (1பேது.1:23–25). வேதவசனம் அழியாத வித்து; அதை எடுத்து ஒரு மனிதனுடைய இருதயத்தில் விதைக்கும்போது அது அவனுக்குள் பலன்கொடுக்கிறது. நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவன் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறான். நீங்கள் எப்படிப்பட்ட இருதயமுடையவர்களாக இருக்கிறீர்கள்?

இன்றைய உலகம் மக்கள் காணாதவைகளில் துணிவாய் நுழைந்து, தங்கள் மாம்சசிந்தையில் வீணாய் இறுமாப்புக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் உங்களுடைய பந்தைய பொருளை இழக்கச்செய்வார்கள். இச்செய்தியை வாசிக்கிற நண்பா, பிதாவாகிய தேவன் நம்மில் ஒருவருக்கும் தூரமானவர் அல்ல. நீ அவருடைய வார்த்தையை ஏற்றுக்கொண்டு, அவர் ஏற்படுத்தியுள்ள இரட்சிப்பின் திட்டத்தை, வேதவாக்கியங்களைக் கொண்டு ஆராய்ந்து, அதற்கு கீழ்ப்படிவாயானால் நீ இரட்சிக்கப்படுவாய். வீணானவைகளை நாடி உன் வாழ்நாட்களை வீணாக்கிப்போடாதே. "கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதியிருக்கிறார் (ரோ.10:13). உன் ஆத்துமா இரட்சிக்கப்பட தொடதே, தீண்டாதே, ருசிபாராதே என்கிற கட்டளைகளுக்கு அடிபணிந்து போய்விடாமல், வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்ற வசனத்தை நினைவு கூர்ந்து. உன் வாழ்விலும், பேச்சிலும், நடக்கையிலும், மற்றவர்களுக்கு மாதிரியாக நடந்து கர்த்தருடைய வார்த்தையைப் பற்றிக்கொள். அதுவே உன்னை இரட்சிக்கும். ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். நாங்கள் உங்களுடைய இரட்சிப்புக்காக அனுதினமும் ஜெபிக்கிறோம். கர்த்தருடைய வல்லமையுள்ள வசனம் உங்களோடு இப்பொழுதும் எப்பொழுதும் இருப்பதாக!

# ஆராதனையில் என்ன சம்பந்தப்பட்டுள்ளது?

# What is Involed in Worship?

*-J.C.Choate*




இயேசு, "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்" என்றார் (யோவா.4:24). எப்படிப்பட்ட விசேஷித்த, ஆனால் எளிமையான கூற்று இது!. தேவன் ஆவியாயிருக்கிறார், சகலவற்றையும் சிருஷ்டித்தவர், மேலும் அவர் ஆராதிக்கபட வேண்டியவர். ஆனால் அவர் ஆராதிக்கப்பட வேண்டியவரானால், மற்றும் நம்முடைய தொழுகை அவரால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால், அது ஆவியோடும் உண்மையோடும் இருக்கவேண்டும். "ஆவி"எனக் குறிப்பிடுகையில் உண்மை, மனவெழுச்சி, சம்பந்தப்படுதல், மேலும் போற்றுவதற்கான விருப்பம், மற்றும் தேவனை கனப்படுத்துவது போன்றவைகள் அதில் அடங்குகிறது. ஒருவன் என்ன செய்துகொண்டிருக்கிறான் என்பதை தன் மனதில் தொடர்ச்சியாக நிலை நிறுத்திக்கொள்ளவேண்டும் என்பதே இதன் பொருள், அவன் ஆராதனையின் ஒவ்வொரு பகுதியிலும் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும், மேலும் தன்னுடைய மனதை மற்றப்பொருட்களின் மேல் பறக்கவிட அனுமதிக்கக் கூடாது. "உண்மை" என்பது கர்த்தருடைய சித்தத்திற்கு அர்ப்பணித்து, அவருடைய போதனையைப் பின்பற்றி, அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்திருத்தலை குறிப்பிடுகிறது.

தேவன் தம்முடைய ஜனங்கள் தம்மை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும், அது வாரத்தின் முதல் நாளில் (அப்.20:7), கர்த்தருடைய நாளில் (வெளி.1:10), தம்முடைய ஞாயிற்றுக் கிழமையில் நடைபெற வேண்டும் என விரும்புகிறார். அவர், மேலும் தம்முடைய பிள்ளைகளுக்கு, கிறிஸ்தவர்களுக்கு, கர்த்தருடைய சபை அங்கத்தினர்களுக்கு, அவர்களுடைய ஆராதனையில் பின்வரும் காரியங்களையும் சேர்த்துக்கொள்ளும்படி அறிவுறுத்தியிருக்கிறார்.

1. கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொள்ளும்படி கூடிவரவேண்டியவர்களாயிருக்கிறார்கள். இது தேவன் தம்முடைய ஜனங்களோடு பேசுவதற்கான தேவனுடைய வழியாகும். அவர் நம்மோடு நேரடியாக தனியாக மற்றும் தம்முடைய வார்த்தைக்கு மாறாக பேசுகிறவரல்ல, ஆனால் தம்முடைய வார்த்தையின் மூலம் மட்டுமே பேசுகிறார். தேவன் நமக்கு என்னவெல்லாம் கூற விரும்பினாரோ அவையனைத்தும் வேதத்தில் எழுதப்பட்டுள்ளது இரட்சிப்பைப் பற்றி, சபையைப் பற்றி, கிறிஸ்தவ வாழ்வைப் பற்றி, பரலோகத்தைப்பற்றி, மேலும்

நரகத்தைப்பற்றிய அனைத்தும் வெளிப்படையாக அங்கே எழுதப்பட்டுள்ளது. ஆனபடியால் நாம் தேவனுடைய வார்த்தைகளைக் கற்றுத் தெரிந்துகொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். பவுல் நாம் தேவனுக்கு முன்பாக உத்தமராக இருக்கும்படி ஜாக்கிரதையாயிருக்க வேண்டுமெனக் கூறுகிறார் (2தீமோ.2:15). மீண்டும், அவன் தேவனுடைய வார்த்தை எந்த நற்கிரியையுஞ் செய்ய முழுவதும் தகுதியுள்ளவனாக்குகிறது (2தீமோ.3:16,17) எனக் கூறுகிறான். மேலும் அவன் தேவனுடைய வார்த்தையைக் கேள்விப்படுகிறதினால் விசுவாசம் வருகிறது எனவும் கூறுகிறான் (ரோம.10:17).

2. கிறிஸ்தவர்கள் ஜெபிக்கும்படி வாரத்தின் முதல்நாள்தோறும் கூடிவர வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இதுவே தேவனிடத்தில் நாம் பேசுகின்ற வழியாகும். பெந்தெகொஸ்தே நாளில் 3000 பேர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப் பட்டவர்களாக சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்பு (அப். 2:37,38,47), அப்போஸ்தலர் 2:42 ல், "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" என நாம் வாசிக்கிறோம். கிறிஸ்தவர்களாக மாறினவர்கள் தொடர்ந்து அப்போஸ்தலருடைய உபதேசத்தில் நிலைத்திருந்தார்கள். அவற்றின் ஒரு பகுதி ஆராதனையாயிருந்தது, ஆராதனையின் ஒரு பகுதி ஜெபங்களை உள்ளடக்கியதாயிருந்தது. ஜெபத்தின் முக்கியத்துவத்தைப் பற்றியும் ஜெபத்தின் அவசியத்தைப் பற்றியும் பேசுகின்ற வேதாகம வசனங்கள் அநேகமுண்டு. பவுல் நாம் இடைவிடாமல் ஜெபிக்க வேண்டுமெனவும் (1தெச.5:17), மேலும் நம்முடைய வேண்டுதல்களை நாம் தேவனுக்குத் தெரியப்படுத்தவேண்டும் (பிலி.4:6) எனவும் சொன்னான். நாம் எப்பொழுதும் ஜெபிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறோம் (லூக்.18:1). நாம் நம்முடைய மத்தியஸ்தரும், பரிந்துபேசுகிறவருமான கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் (யோவா.14:13; 1யோவா.2:1). மேலும் நாம் அவருடைய சித்தத்தின்படி ஜெபிக்கவேண்டும் (1யோவா.5:14,15).

3. கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய பிதாவையும் அவருடைய குமாரனாகிய இயேசுவையும் பாடித்துதிக்கும்படி கர்த்தருடைய நாளில் கூடிவரவேண்டியவர் களாயிருக்கிறோம். பவுல், "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக் கீர்த்தனம்பண்ணி" (எபே.5:19) என்றான். அவன் கொலோசெயர் 3:16 லும் 1கொரிந்தியர் 14:14,15லும் இதே கூற்றையே அறிவுறுத்தி, நாம் ஆவியோடும் புரிந்துகொள்ளுதலோடும் ஜெபிக்கவேண்டும் என்றான். கர்த்தருடைய ஜனங்கள் இயந்திரங்களான வாத்தியக் கருவிகளுடன் பாடியதாக புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் நாம் எங்கும் வாசிக்கிறதில்லை. மாறாக, நாம் நம்முடைய இருதயத்தில் பாடவேண்டியவர்களாயிருக்கிறோம் என்று பவுல் கூறுகிறான். வாயின் இசை, மனித குரல்நாண்களாகிய கருவியிலிருந்து வரும் பாட்டு உலகத்தில் மிகவும் அழகான இசையாகும். இவ்வகையான இசையே நாம் கர்த்தரை ஆராதிக்கும் போது கர்த்தர் விரும்புகிற இசையாகும்.

4. கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாளிலே கர்த்தருடைய நினைவுகூருதலாகிய இராப்போஜனத்தில் பங்குகொள்ளும்படி கூடிவரவேண்டியவர்களாயிருக்கிறார்கள். நாம் இவ்வுலகில் இரட்சிக்கப்படவும், வரவிருக்கின்ற உலகில் நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கையுடைவர்களாயிருக்கவும் இயேசு சிலுவையிலே மரித்தார். ஆனபடியால், அவர் வாரத்தின் முதல் நாள்தோறும் பலியான தம்முடைய சரீரம் மற்றும் நமக்காக சகித்துக் கொண்ட பாடுகளின் நினைவுகூருதலாக புளிப்பில்லாத அப்பத்தில் பங்கு கொள்ளும்படி தம்முடைய ஜனங்களைக் கேட்டுக்கொண்டார் (மத்.26:26). நாம் நம்முடைய பாவங்களுக்கு மன்னிப்புண்டாயிருக்கும்படி சிந்தப்பட்ட அவருடைய இரத்தத்தின் நினைவுகூருதலாக திராட்சப்பழரச பாத்திரத்தில் பங்குகொள்ள வேண்டியவர் களாயிருக்கிறோம் (மத்.26:27,28).

5. இறுதியாக, நாம் நம்முடைய வருமானம் மற்றும் ஆஸ்தியின் ஒரு பங்கினை செலுத்தும்படிக்கு வாரத்தின் முதல் நாளிலே கூடி வரவேண்டியவர்களாயிருக்கிறோம். பவுல் கொரிந்து சபை கிறிஸ்தவர்களுக்கு. "பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மபணத்தைக்குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும், தன் தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்" (1கொரி. 16:1,2) என்றான். மேலும் அவன், "பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமா யிருக்கிறார்" (2கொரி.16:1,2) என்றான். எனவே தேவன் எதை விரும்புகிறார்? அவர் தம்முடைய ஜனங்கள் தம்மை தொழுதுகொள்ளும்படியும்; சபைப் பணிக்கென அங்கே பணம் இருக்கும்படி நம்முடைய வருமானத்திலிருந்து ஒரு பகுதியைக் கொடுக்கும்படியும் விரும்புகிறார். நாம் எவ்வளவு கொடுக்கும்படி தேவன் விரும்புகிறார்? நாம் மனதில் நியமித்திருக்கிறபடி. அது எவ்வளவு? கண்டிப்பாக, பழைய ஏற்பாட்டு கட்டளையின் கீழ் யூதர்கள் கொடுத்து வந்த பத்து சதவீதம் போல் அல்லது அதற்கும் மேல். எப்படி கொடுக்கவேண்டுமென தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார்? விசனமாயல்ல, ஆனால் நாம் மனதில் நியமித்திருக்கிறபடி, நாம் விசனமாய் அல்லது நிர்பந்தமான உணர்வுகளின் அடிப்படையில் கொடுப்போமானால், நாம் தேவனைப் பிரியப்படுத்துகின்ற வழியில் கொடுக்கிறவர்களாயில்லை. காயீனுடைய காணிக்கை புறக்கணிக்கப்பட்டது ஏனென்றால் அந்த காணிக்கை தேவன் கேட்டுக்கொண்டது போலல்ல, நம்முடைய காணிக்கையும் ஆவியோடும் உண்மையோடும் கொடுக்கப்படாவிட்டால் புறக்கணிக்கப்படும்.

இப்போது நாம் ஆராதனையின் இந்த செயல்களில் எதையாவது விட்டு விட்டு தேவன் ஏற்றுக்கொள்ளுகிற வண்ணமாக ஆராதனை செய்யமுடியுமா? நிச்சயமாக ஒன்றைக் கூட நாம் தவிர்க்க முடியாது. இன்னும் சிலர் கர்த்தருடைய பந்தியில் மட்டும் பங்கு கொண்டாலே, அவர்கள் தொழுது கொண்டதாக எண்ணுகின்றனர். கர்த்தருடைய

பந்தி முக்கியமானது, ஆனால் அதைப்போன்றே நம்முடைய வேதபாடம், நம்முடைய ஜெபம், நம்முடைய பாடல், நம்முடைய கொடுத்தல் போன்றவைகளும் முக்கியம். தயவுசெய்து ஒவ்வொரு கர்த்தருடைய நாளில் தொழுதுகொள்ள திட்டமிடுங்கள், தொழுகையின் ஒவ்வொரு செயலிலும் உங்களை ஈடுபடுத்திக் கொள்ள திட்டமிடுங்கள். இதுவே ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் நீங்கள் செய்யத்தக்க ஆராதனையாகும்.

மேலும், நீங்கள் தொழுதுகொள்ளும்போது உங்களுடைய நினைவுகளை நீங்கள் செய்து கொண்டிருக்கிறவற்றிற்கு நேராக ஒருமுகப்படுத்துங்கள். தூக்கத்திற்கு இடமளிக்காதீர்கள், ஆராதனை செய்வதிலிருந்து விடுபட்டு உங்களுடைய மதியஉணவிற்காக நீங்கள் திட்டமிட்டிருக்கிறவற்றிற்கும் மேலும் ஆயிரக்கணக்கான மற்ற காரியங்களாகிய உங்களுடைய வேலையைப் பற்றி நினைப்பதற்கும் உங்கள் மனதை அலையவிடாதீர்கள். கர்த்தருடைய ஜனங்களோடு ஆராதனையில் நீங்கள் கூடிவந்தால், நீங்கள் ஆவியோடும் உண்மையோடும் ஆராதனையில் பங்குகொள்ளுங்கள், அதன் பிறகு நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள், மற்றவர்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தர் மகிமைப்படுத்தப்படுவார். நீங்கள் உங்களுடைய குடும்பத்திற்கும், உங்களுடைய நண்பர்களுக்கும், எல்லா உறவினர்களுக்கும் நல்ல மாதிரியை ஏற்படுத்துவீர்கள். தயவு செய்து ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் தொழுதுகொள்ளுங்கள், உங்களுடைய தொழுகை வேதாகமத்தின்படியாகவும் ஆவிக்கேற்றபடியாகவும் இருக்கக்கடவது. அதன்பிறகே கர்த்தர் அவற்றை ஏற்றுக்கொள்ளுவார்.

## வெற்றிக்கு ஐந்து முதன்மைகள்

1. முதலாம் மணி வேளையை தேவனுக்குக் கொடு.
2. வாரத்தின் முதலாம் நாளை தேவனுக்குக் கொடு.
3. உன்னுடைய வருமானத்தின் முதற் பலனை தேவனுக்குக் கொடு.
4. ஒவ்வொரு தீர்மானத்தில் முதல் யோசனையை தேவனுக்குக் கொடு.
5. உன்னுடைய இருதயத்தில் முதலிடத்தை தேவனுக்குக் கொடு.

*இது உண்மையாகவே அதிகக் கிரியை நடப்பிக்கிறது!*

**-The Voice of Truth International**

பெண்கள் பகுதி



# நான் எந்த சமயத்தைப் பின்பற்றுகிறேன் என்பது குறித்து கவலையில்லை

# It's Doesn't Matter Which Religion I Follow

*-Betty Burton Choate*

உலகில் பல சமயங்களும், பல புனித நூல்களும் பல மத குருக்களும் உண்டு. இந்த பல்வேறு சமயங்களின் ஸ்தாபகர்கள் 'புனிதர்கள்' என தங்கள் சீடர்களால் கருதப்படுகின்றனர். அநேக ஜனங்கள் வழக்கம்போல தங்களுடைய பெற்றோர்களின் சமயத்தைப் பின்பற்றுவதில் நிலைத்திருந்தாலும், உண்மையில் எல்லா சமயங்களும் ஒன்று என்றும், முடிவில் விளைவானது, எல்லாருக்கும் ஒரே விதமாக இருக்குமென்றும் நினைக்கின்றனர். அவர்கள் "எல்லா சமயங்களும் நல்லவனாயிரு, நல்லதைச் செய்" எனப் போதிக்கிறது. இதுவே போதுமானது நீங்கள் முகமதுவையோ அல்லது கிருஷ்ணனையோ அல்லது இயேசுவையோ பின்பற்றினால் பரவாயில்லை— எல்லாமே ஒன்றுதான் ! என விவேகத்துடன் விளக்குகின்றனர்.

ஆனால் இது ஒன்றானதா? பல்வேறு சமய சீடர்களை பின்வரும் இவைகளின் மூலம் வேறுபடுத்த உங்களால் முடியுமா?

☞ அவர்களின் ஆடை அணியும் விதத்தை உற்றுநோக்கல்?

☞ அவர்களுடைய சொற்பொழிவுக்குக் கவனம் செலுத்துதல்?

☞ அவர்கள் மற்றவர்களை நடத்தும் விதத்தை உற்று நோக்கல்?

☞ அவர்களுடைய நடத்தை மற்றும் கௌரவத்தை பகுத்துப் பார்த்தல்?

☞ அவர்களுடைய வாழ்வில் எது முக்கியமானது என்பதை பார்த்தல்?

☞ அவர்கள் குடும்ப அங்கத்தினரோடு எவ்வாறு சமாளிக்கிறார்கள் என்பதை கவனித்தல்?

☞ அவர்கள் எங்கு, மற்றும் எவ்வாறு ஆராதிக்கிறார்கள் என்பதை உற்றுப் பார்த்தல்?

☞ அவர்கள் தேவனிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள் என அறிந்து கொள்ளுதல்?

☞ அவர்களுடைய வாழ்க்கை தத்துவம், மரணம், மற்றும் பிற்கால வாழ்வு போன்றவற்றை கேள்விபடுதல்?

☞ அவர்கள் எவ்வாறு தங்கள் வாழ்வில் பாவத்தை சமாளிக்கிறார்கள் என கற்றறிதல்?

☞ அவர்களுடைய குரு மற்றும் புனிதநூலின் போதனையை படித்தல்?

நிச்சயமாக, ஒவ்வொரு சமயத்தினை ஒப்பிட்டுப்பார்ப்பதில் நாம் இப்பட்டியலை தொடரலாம், மேலும் நாம் தொடக்கத்திலிருந்து முடிவுவரை போதனைகளும் பழக்கவழக்கங்களும் அனுதின வாழ்வில் ஒரு முழுமையான வித்தியாசத்தை ஏற்படுத்துவதோடுகூட நித்திய எதிர்பார்ப்பை ஏற்படுத்துகிறதை காணலாம்.

நாம் ஏதோ சில சமயத்தை பின்பற்றுவது என்பது போதுமானதல்ல. நாம் நமது முற்பிதாக்களின் சமயத்தை பின்பற்றுவது என்பது போதுமானதல்ல. நாம் நம்மைச் சுற்றியிருக்கிற கூட்டத்தாருடைய சமயத்தைப்பின்பற்றுவது என்பது போதுமானதல்ல. தனித்தனியே, ஒவ்வொரு மனிதனும் ஒரு அழிவில்லாத ஆத்துமாவாகும்,மேலும் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்வில் நாம் தெரிந்தெடுக்கும் சமயத்திற்காக நித்தியத்தில் பதிலளிக்க வேண்டியவர்களாக இருப்போம். நாம் உணர்ச்சியற்றவர்களாய், அக்கறையுடனிருக்க விரும்பாதவர்களாய் இருந்தால், **நாம் எந்த சமயத்தைப் பின்பற்றுகிறோம் என்பது பற்றி கவலையில்லை** என்ற தீர்மானத்திற்கு வரலாம்.

நாம் ஞானமுள்ளவர்களாயிருந்தால் ஒப்பிட்டுப்பார்க்க, போதனைகளைக் கற்க, ஜனங்களின் வாழ்வின் முடிவில் ஏற்படும் விளைவைக் காணவும்கூட அதிக விருப்பமுடையவர்களாயிருப்போம், ஏனென்றால் இவையெல்லாவற்றின் முடிவிலும் நாம் சத்தியத்தை அறிந்து கொள்ள முடியும்.

கிறிஸ்தவத்துக்கும் மற்றெல்லா சமயங்களுக்குமிடையே உள்ள வேறுபாடுகளில் முக்கியமையானதும் அதிக பிரதானமானதுமான ஒரு வேறுபாடு என்ன? அது இதன் ஸ்தாபகர், இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டு அவருடைய மரித்தசரீரம் அடக்கம்பண்ணப்பட்டதேயாகும். இது வரலாற்று உண்மையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது, பல சாட்சியங்களின் விஷயம் தெரிந்தவர்களால் இதை மறுக்க முயற்சித்தும் கூட முடியாமல் போயிற்று அவருடைய சங்கதி அவர் தம்முடைய சீஷர்களுக்கு போதித்தவற்றை தொடர்ந்து போதித்த சீஷர்களோடு கூட அங்கு முடிந்திருக்குமானால், விந்தையான கொள்கைகளை விவரித்து, சீஷர்களின் குழுக்களை ஏற்படுத்தி தங்களுடைய சமயத்தை தங்களுடைய மரணத்திற்குப் பின் உலகத்திற்கு மரணசாசனமாக ஏற்படுத்துகிற மற்றவர்களோடு இவர் சமமாக கருதப்பட்டிருப்பார்

**ஆனால் இச்சம்பவம் அவருடைய மரணத்தோடும், அடக்கத்தோடும் ஒரேயடியாக முடிந்து விடவில்லை. அவருடைய விரோதிகள் அவரை சிலுவையில் அறைந்த அதே நகரத்தில் அவருடைய சீஷர்கள் அவருடைய சரீரத்தை களவாடிக் கொண்டுபோக ஏதுவில்லாதபடி அவருடைய கல்லறையைச் சுற்றி காவல் வைத்தார்கள், அவருடைய சரீரம் கல்லறையிலிருந்து காணப்படாமற்போயிற்று! வேதாகமத்தில் கூறப்பட்டது போல அவர் உண்மையாகவே உயிர்தெழுந்து பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் என்பதற்கு இரண்டு சாட்சியங்கள் உண்டு.**

( 1 ) அவருடைய விரோதிகள் அவருடைய மரித்த சரீரத்திற்கு உரிமை பாராட்டிக்கொண்டிருந்தாலும் கூட காவலாளிகள் கல்லறை வெறுமையாக இருக்க கண்ட பிறகு, அவர்கள் ஒருபோதும் அந்த சரீரத்தைக் கொண்டு வரவில்லை. அவர் உண்மையாகவே உயிர்த்தெழுந்திருக்கவில்லையென்றால்அவர் உயிர்த்தெழுந்தார் என்று தெரிவிக்கிறவர்களின் வாய்களை மிக எளிதாக அடைத்திருந்திருக்கக் கூடும்! ஆனால் அவர்கள் அதைச்செய்யவில்லை – ஏனென்றால் அவர்களால் அது **முடியவில்லை!**

( 2 ) இயேசுவின் மரணத்தின் போது, அவருடைய சீஷர்கள் தங்களுடைய சொந்த ஜீவனை காக்க, பயத்தினால் அவரை மறுதலித்துவிட்டார்கள். அவருடைய உயிர்தெழுதலுக்குப் பிறகு, அவர் அவர்களுக்கு இருமுறை காட்சியளித்து உலகமெங்கும் சென்று இரட்சிப்பின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார். இதை அவர்கள் செய்து, மிகுந்த உபத்திரவத்தினால் மரணத்திற் குள்ளானார்கள். தங்கள் திடநம்பிக்கையில் இந்த தத்ரூபமான மாற்றம், இயேசு உண்மையாகவே தங்களுடைய உயிர்தெழுந்த இரட்சகர் என்று வேதாகமத்தில் எழுதப்பட்டது உண்மை என்பதற்கு ஒரு பலத்த சாட்சியாயிருக்கிறது.

வேறு எந்த ஒரு சமய ஸ்தாபகரும் மரணத்தை ஜெயிக்கவில்லை. இதுவே கிறிஸ்தவத்திற்கும் மற்றவற்றிற்குமுள்ள அடிப்படையான வித்தியாசம். "...இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள்சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" (ரோம.8:11) என நாம் வாக்களிக்கப்பட்டுள்ளோம்.

திரும்பச் சென்று இக்கேள்வியை மறு ஆய்வுசெய்யுங்கள். கிறிஸ்துவுக்குள்ளாக வாக்களிக்கப்பட்டிருக்கிற இரட்சிப்பையும் நித்திய ஜீவனையும் தெரிந்து கொள்ளுங்கள்.

**வேதஅறிவுப்போட்டி எண் 56-ல் வெற்றிபெற்றவர்கள்**

| | |
|---|---|
| S. தண்டபானி | -சிலுவத்தூர் |
| Mrs. மரகதம் திரவியம் | -கோம்பை |
| I. ஐசக் | -திருநெல்வேலி |
| M.புகழரசு | -குடியாத்தம் |
| K.P.தானியேல் | -குடியாத்தம் |
| G.A.ஜான்சன் | -தாலைமலைபட்டி |
| K.M.ஜான் | -கரடிகுளம் |
| P.S. லலிதாபிரேமகுமாரி | - மதுரை |
| A.ஜோதிகாந்தம் | -போடபாறை |
| R.அருண்குமார் | -பிடாரியூர் |
| N.கமலவேணி | -சென்னை |
| N.ஜான் செல்லையா | -திருவாதவூர் |
| M.ராஜேஸ்வரி | -நாகபட்டிணம் |
| G.பூங்கோதை | -வெ. பாளையம் |
| J.நிர்மலாஜான் | -மதுரை |
| P.அலிஸ்மேரியம்மாள் | -வதிலை |
| G.ஏசையன் | -கோபி |

**வேதஅறிவுப்போட்டி எண் 56-ன் விடைகள்**

| | |
|---|---|
| 1.சொல்லாதே | - பிர.7:10 |
| 2. எபேசு | - வெளி.2:7 |
| 3. கர்த்தரின் சாபம், ஆசீர்வாதம் | - நீதி.3:33 |
| 4. அதிக மகிமையுள்ள தாயிருக்குமே | - 2கொ.3:11 |
| 5. தாவீது | - சங்.51:16 |
| 6. சகரியா | - லூக்.1:59 |
| 7. பூர் | - எஸ்.9:24 |
| 8. கேடான | - ரோம.1:28 |
| 9. அர்தசஷ்டா | -எஸ்.7:14 |
| 10. ஏனோக்கு | -யூதா.14 |

கிறிஸ்துவ தலைமைத்துவ
பயிற்சி பாடங்கள்
Christian Leadership
Training Course

பாடம் - 22

# பிரசங்கியாரின் பணி
# The Work of Preacher

J.C.Choate

*-Translated by G.Daniyal, Chennai*

நாம் வலியுறுத்தியபடி சுவிஷேசப்பிரசங்கியாராக இருந்து மக்களுடைய மனங்களிலே நல்ல தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றால் அவருக்கு பிரசங்கம்செய்ய வேண்டும் என்ற ஆசை, சரியான நோக்கங்கள், அதோடு கூட சற்று திறமையும் இருக்க வேண்டும். சிலருக்கு இயற்கையாகவே பேச்சுத் திறன் இருக்கும் ஆனால் பிரசங்கியாராயிருப்பதற்கு இன்னும் அதிகம் தேவை. தேவனிடமும் மனிதனிடமும் உண்மையுள்ளவராகவும் தியாக மனப்பான்மையோடு சேவை செய்பவராகவும் தன்னுடைய வேலையில் பயிற்சி எடுத்து நன்கு படிக்கிறவர்களாகவும் இருக்கவேண்டும். பொது இடங்களில் பேசுவதற்கு இன்னும் ஞானம் தேவை. நாம் தொழில் ரீதியான பாடங்களை மட்டுமே கற்றுக்கொடுக்கிற மக்களை உருவாக்க முயற்சிக்கவில்லை, ஆனால் பிரசங்கியார் என்பவர் தேவனுடைய வார்த்தையையும் ஆத்துமாக்களையும் கையாளுகிறவர் ஆகவே அவர் தன்னுடைய பணியை சிறப்பாகச் செய்வது அவசியம்.

நம்முடைய கர்த்தருடைய சபையிலே அற்புதமான அழைப்போ அல்லது சபையின் எழுத்துப்பூர்வமான அனுமதியோ பிரசங்கிப்பதற்குத் தேவையில்லை, ஒருவர் கேட்கலாம் "பிரசங்கிக்க விரும்புகிறவர் யார் வேண்டுமானாலும் பிரசங்கிக்கலாம் என்று நீங்கள் சொல்லுவீர்களா? ஒரு வகையிலே பார்த்தால் அது உண்மைதான். அவர் ஆணாகவும் சபை அங்கத்தினராகவும் விசுவாசமுள்ளவராகவும் பிரசங்கிக்கிற வாஞ்சையுள்ளவராகவும், சகோதரர்களால் பிரசங்கியாராக ஏற்றுக்கொள்ளப் படுகிறவராகவும் இருக்க வேண்டும். ஒரு சபையிலே அவர் சேவையை பயன்படுத்த விருப்பப்படாவிட்டாலும் வேறு இடத்திலே சென்று வேறு யாருக்காவதுகூட பிரசங்கிக்கலாம். ஆகவே அனுமதிக்கப்படுவது என்பது பிரச்சனையல்ல ஆனால் பிரசங்கிக்க போதுமான அளவு தன்னை தயார் செய்து கொள்ள வேண்டும் என்பதே அவசியம்.

ஆனால் ஏன் இந்த விதமான வேலைக்கு பிரசங்கியார் தன்னைத் தயார் செய்து கொள்ள வேண்டும்? ஏனென்றால் இது மிகவும் ஜாக்கிரதையான ஆவிக்குரிய பணி. அதிக நேரம் கடினமாக உழைக்க வேண்டியுள்ளது. தான் செய்ய வேண்டிய பணியை உண்மையாக செய்ய வேண்டுமென்றால் இவைகளையெல்லாம் செய்யவேண்டும். பிரசங்கிப்பது என்பது ஏதோ மகிமைக்காகவோ அல்லது ஒன்றும் செய்யாமல் படுத்துக்கிடப்பதோ அல்ல. நல்ல உணவு, யாருக்கும் பதில் சொல்லத் தேவையில்லை என்கிற நிலை, இவைகளோடு எல்லாம் கொடுக்கப்பட்டு ஆங்காங்கே பிரயாணம் பண்ணுகிற வேலையும் அல்ல. பிரசங்கிப்பது என்பது ஒருவர் உண்மையாக உழைத்து தொடர்ந்து பிரசங்கிக்கும் வாய்ப்புகளைக் கண்டு செயல்படுவதாகும். அவர் மக்களை சந்தித்து பிணியாளிகளைத் தேற்றி அவர்களுக்காக ஜெபித்து, பிரச்சனை

உள்ளவர்களுக்கு உதவி செய்து ஆத்துமாக்களை கிறிஸ்துவிடம் திருப்பி வாலிபர்களை பிரசங்கிக்க போதித்து, பயிற்றுவிப்பது போன்றவையாகும். மற்றவர்களோடு (பிரச்சனைகளை) பகிர்ந்து கொள்ளும்படியாக அழைக்கப்படலாம். அவர் சிலரால் நிராகரிக்கப்படலாம். மேலும் அவருடைய விசுவாசத்தினிமித்தமும், ஊழியத்தினி மித்தமும் துன்பங்களை அனுபவிக்க வேண்டியிருக்கலாம்.

பிரசங்கிப்பது என்னவென்று நன்றாக தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் அப்போஸ்தலர் நடபடிகள் முழுவதையும் நன்றாக படித்துப்பாருங்கள். பேதுருவையும், யோவானையும் பற்றி அப் 3,4 அதிகாரங்களில் படித்துப் பாருங்கள். அவர்கள் ஒரு மனிதனை குணமாக்கியபிறகு பிரதான ஆசாரியரால் அழைக்கப்பட்டு கிறிஸ்துவைப்பற்றிப் பிரசங்கிக்கக் கூடாது என்று எச்சரிக்கப்பட்டார்கள். பின்பு அவர்கள் அடிக்கப்பட்டு சிறையிலிடப்பட்டார்கள். ஆனாலும் அவர்கள் தொடர்ந்து பிரசங்கித்தார்கள் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் பதிவேடுகள் நமக்குப் பின்வருமாறு சொல்கின்றன."பேதுருவும் யோவானும் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தேவனுக்குச் செவி கொடுக்கிறதைப்பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே என்றார்கள்" அப் 4:19–20 என வாசிக்கிறோம். பின்னும் நாம் " கர்த்தருடைய தூதன் இராத்திரியிலே சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து, அவர்களை வெளியே கொண்டுவந்து;" (அப் 5:19). தொடர்ந்து எழுத்தாளர் சொல்லுவது. "அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்" (அப் 5:41–42). பவுல் கர்த்தருடைய ஜனங்களை எவ்வளவாய் துன்பப்படுத்தினார் என்று கவனியுங்கள் ஆனால் பின்பு அவர் மாற்றப்பட்டார். அவருடைய பெயரும் பவுல் என்று மாற்றப்பட்டது. அவர் அப்போஸ்தலராக்கப்பட்டார். அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தை வாசிக்கும் போது கிறிஸ்துவுக்காக எவ்வளவாய்ப் பாடுபட்டார் என்பதைக் காணலாம் (அப்போஸ்தலர் 8–9 அதிகாரங்கள்).

அப்போஸ்தலர் மட்டுமல்லாமல் கிறிஸ்துவை பிரசங்கித்த அநேகம் பேர் துன்பப்பட்டார்கள். நீங்கள் சொல்லலாம் ஆம், அன்றைக்கு அநீதியும் அடக்கு முறையும் இருந்தது இப்பொழுது சூழ்நிலை அப்படியில்லையென்று,உண்மைதான் இன்றைக்கு சில காரியங்கள் வித்தியாசமாக இருக்கலாம். கர்த்தருடைய ஜனங்களுக்கு விரோதமாக இழைக்கப்பட்டக் கொடுமைகள் முதல் நூற்றாண்டு காலத்திலும் சரித்திரத்தில் மற்ற அநேக சமயங்களிலும் கிறிஸ்தவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் இப்போதில்லை. ஆனால் நீங்கள் எப்போதும் கிறிஸ்துவை பிரசங்கிக்கும்படியும் நீதிக்காகவும் இயன்றதை செய்ய முயற்சிக்கும் போதும் அதை விரும்பாத யாராவது ஒருவர் உங்களை எதிர்ப்பார்கள். பவுல் சொன்னார் "மேலும் கிறிஸ்துஇயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2தீமோ 3:12).

அப்போதும் இது உண்மையாயிருந்தது இப்போதும் இது உண்மையாயிருக்கிறது. அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் முதல் நூற்றாண்டிலிருந்த அப்போஸ்தலர்கள் மற்ற கிறிஸ்தவர்களுடைய விசுவாசம் அவர்களுக்கு வந்த துன்பங்களினாலே சோதிக்கப்பட்டது. அவர்களுக்கு அந்தப் பாடுகளையெல்லாம் சகிப்பதற்கு பலமான விசுவாசம் தேவைப்பட்டது. அதுபோலவே இன்றும் நாம் யாருக்கு சேவை செய்கிறோம், ஏன் அவருக்கு சேவை செய்கிறோம் என்பதை அறிந்து அந்த சேவையிலே நாம் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். அப்படி செய்யும்போது அந்த காலங்களிலே நடந்த பயங்கரமான காரியங்களை அனுபவிக்க வேண்டியிராது என்று நாம் நம்பலாம். ஆனால் அப்படி செய்யும்படி நாம் அழைக்கப்பட்டால் அந்தப் பரீட்சையை நாம் வென்று நம்முடைய கர்த்தருக்கு விசுவாசமுள்ளவர்களாக இருப்போம் என்று நம்புவோமாக.

சுவிஷேசப் பிரசங்கியாராயிருப்பதில் அநேக காரியங்கள் அடங்கியுள்ளது என்பதைக் காணலாம். உழைக்கவும், சேவை செய்யவுமே பிரசங்கியாராக இருக்கிறார். சோம்பலாக தன்னைச் சுற்றியுள்ளவர்களின் தேவைக்கு செவிசாய்க்காமல் இருபதற்காக அல்ல. தாம் பெற்றுக் கொள்ளும் உதவிக்காக எத்தனை மணிநேரம் வேலை செய்கிறோம் என்று கணக்கிட்டு செயல்படாதவராக இருக்க வேண்டும். அவர் எங்கே குறைவாகச் செய்யலாம் என்று பார்க்காமல் அதிகம் செய்பவராயிருக்க வேண்டும்.

பிரசங்கிப்பதோடு கூட, கூட்டங்கள் நடத்துவது, தனிப்பட்ட வேலைசெய்வது ஆத்மாக்களை மனமாற்றுவது, கர்த்தருக்கு கீழ்ப்படியவிரும்புவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது, திருமணங்களை நடத்திவைப்பது, ஈமக்கிரியை நடத்திவைப்பது போன்றவற்றிற்கு அழைக்கப்படலாம். திருமணங்களை நடத்த அரசாங்கத்தின் தேவைகள் இன்னதென்று அறிந்து அதன்படி அங்கீகரிக்கப்பட்டால் சட்டப்படி சேவைசெய்யலாம். திருமணங்களை நடத்தும் போது மணமக்கள் வேதவாக்கியங்களின்படி இணைக்கப்படுகிறார்களா என்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

அதாவது அவர்களில் யாரும் வேத வசனங்களுக்குப் புறம்பாக விவாகரத்தானவர்களாகவோ அல்லது பலமுறை திருமணம் செய்தவர்களாகவோ இருக்க கூடாது. ஒருநபர் கிறிஸ்தவராக இருக்கும் பட்சத்தில் அவனையோ, அவளையோ கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களுக்குத் திருமணம் செய்து வைக்காதீர்கள்.


ஈமக்கடமைகளை நிறைவேற்றும் போது மரித்தவர்களை குறித்து தீர்ப்புச் சொல்லாதீர்கள், மரித்தோரை பரலோகத்திற்கோ, நரகத்திற்கோ நீங்கள் அனுப்பாதீர்கள். அது உங்களுடைய வேலையில்லை. உங்களுடைய செய்தி அங்கே இருக்கின்ற உயிரோடிருக்கும் மக்களுக்கு, அவர்களை முடிந்தவரை தேற்றி மரணத்திற்கும் நியாயத்தீர்ப்புக்கும் தங்களை ஆயத்தம் செய்யும்படி அவர்களை உற்சாகப்படுத்துவதாக இருக்கவேண்டும்.

ஞானஸ்நானத்தைப் பொருத்தமட்டில் (சிலர் விவரித்தபடி) ஆத்துமாக்களை வெளிநாட்டிலிருந்து ஒருவர் வரும்போது அதைச் செய்யலாம் என்று சேர்த்து வைக்காதீர்கள். உங்களுக்கு உதவி செய்பவர்கள் வருவதாயிருந்தால் கூட அப்படி

செய்யாதீர்கள். அந்த மக்களுக்கு நீங்கள் போதித்து மனமாற்றியிருந்தால் அவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிய விரும்பினால் அந்த கீழ்ப்படிதலை நிறைவேற்றும்படி அவர்களுக்கு உதவியாயிருங்கள். உங்கள் பிரசங்கங்களைச் செய்யும்படியாக போதுமான நேரம் வேதத்தைப் படித்து தயார் செய்ய வேண்டும். உங்களுக்கு ஒரு அலுவலகம் இருந்தால் நேரத்தை அங்கேயே செலவு செய்யாதீர்கள். மாறாக மக்கள் மத்தியில் சென்று கர்த்தருக்கென்று வேலைசெய்து பிரசங்கித்து போதித்து சுவிசேஷமயமாக்குங்கள் பிரசங்கியாராகிய உங்களுக்கு இதுவே வேலை.

**சீர்தூக்கிப் பார்**

**"கர்த்தரோ ஆவிகளை நிறுத்துப் பார்க்கிறார்" (நீதி.16 : 2)**



"வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்களுடைய நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் செல்லுகிறேன்"-இயேசு ( மத்.5 : 20 )




'ஒரே வழி' வேதபாடம்

The Master Course படிக்க விரும்புகிறவர்கள் இன்றே தபால் செலவுக்காக ரூபாய்15-ஐ அனுப்பி, ஒரு வருடத்தில் பயின்று Certificate பெற்றுக்கொள்ளுங்கள்

வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College**
**Post Box 5, Batlagundu-624 202 S.INDIA**

## பொது அறிவு சோதனை

1. வானம் நீள நிறமாக காட்சி அளிக்க காரணம் என்ன?
   அ)ஒளி விலகல் ஆ)கதிர் வீச்சு இ)துகள்களால் ஒளிச்சிதறல்
2. முதன் முதலில் விண்வெளிபயணம் செய்த வீராங்கனை யார்?
   அ)வாலண்டினா ஆ)அனுசுயாதேவி இ)ஷைனி
3. செய் அல்லது செத்து மடி என்ற தாரகமந்திரத்தை சொன்னவர்யார்?
   அ)பாலகங்காதர திலகர் ஆ)மகாத்மாகாந்தி இ)வ.உ.சிதம்பரனார்
4. ஒரு குதிரை திறன் என்பது எத்தனை வாட்?
   அ)700 வாட் ஆ)736 வாட் இ)746 வாட்
5. ரோம் நகரம் பற்றி எரிந்தபோது பிடில் வாசித்ததாக கூறப்படுபவர் யார்?அ)நீரோ ஆ)ஜீலியஸ் சீஸர் இ)ஆண்டனி

விடைகள்
1. ஒளிச்சிதறல்
2. வாலண்டினா
3. மகாத்மாகாந்தி
4. 746 வாட்
5. நீரோ



# விசேஷித்த மேன்மை
# *Special Distinction*

*- J.GloryArjunan*

ஓரிரு மாதங்களுக்கு முன்பாக விசேஷித்த மேன்மைக்குரிய சில ஸ்திரீகளைக் குறித்து பார்த்தோம். இப்போதும் கூட விசேஷித்த மேன்மைக்குரிய மற்றொரு ஸ்திரீயைக் குறித்துப் பார்ப்போம்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவித்துக் கொண்டிருந்த கிறிஸ்தவ ஊழியர்களாகிய பவுல், சீலா போன்றோரை ஐரோப்பாவில் முதலாவது ஏற்றுக்கொண்டவளாக் கருதப்பட்டவள் லீதியாள். அன்றைய நாட்களில் கிறிஸ்துவின் சீஷர்கள் ஒவ்வொரு தேசமாக கிறிஸ்துவின் சுவிசேஷத்தை, அதாவது அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலைப் பற்றி பிரசங்கித்துக் கொண்டு வந்தார்கள். "அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக் கொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்" (அப்.16:14). இந்த ஸ்திரீ முன்னமே தேவனை வணங்குகிறவளாயிருந்தாள். ஆனாலும் பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திற்ந்தருளினார் என வாசிக்கிறோம். அப்படியானால், அவள் தேவனை வணங்குகிறவளாயிருந்தாலும் தேவனுடைய சித்தம் செய்ய அறியாதவளாயிருந்தாள் என்று தான் பொருள். எப்படியெனில் கர்த்தருடைய வசனத்திற்குச் செவிசாய்த்து பின்பு அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர் என்று வசனம் 15–ல் வாசிக்கிறோம். நான் தேவனை வணங்குகிறவள், எனக்கு எல்லாமே தெரியும் என்று சொல்லி அவள் அத்தோடு நின்றுவிடவில்லை, தேவன் அவள் இருதயத்தைத் திறந்தபோது அதைக் கடினப்படுத்தாதபடி பவுல் கூறின தேவனுடைய வசனங்களுக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டாள். இதை வாசிக்கும் அன்பு சகோதரியே, நீங்கள் ஒருவேளை தேவனை வணங்குகிறவர்களாயிருக்கலாம், இருந்தபோதிலும் தேவனுடைய சித்தத்தின்படி நீங்கள் இரட்சிக்கப்பட "விசுவாசமுள்ளவனாகிய ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" என்ற மாற்கு 16:16–ம் வசனத்திற்கேற்ப ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. இதையறியாத அநேகர், நாங்கள் பரம்பரை கிறிஸ்தவர்கள், நாங்கள் தேவனைத் தான் வணங்குகிறோம், எங்களுடைய மூதாதையர் எல்லாரும் சபையில் குருமார்களாகவும், உபதேசிகளாகவும் இருந்தார்கள் என்று சொல்லி தேவனுடைய சித்தம் அறியாதவர்களாகவே கடைசி வரை ஜீவித்து மரித்துப் போய்விடுகின்றனர். ஆனால், தேவனுடைய வசனம் நம்மை நியாயந்தீர்க்கிறதாக இருக்கிறது என்பதை மறந்து போகக்கூடாது.

பாருங்கள், அப்.16:14–15–ம் வசனங்களிலிருந்து இன்னும் இரண்டு பாடங்களைக் கற்றுக் கொள்ள முடிகிறது. வசனம் 15–ல் 'அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பு' என வாசிக்கிறோம். இது பழைய ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ள ஒரு ஞானமுள்ள ஸ்திரீயாகிய ராகாபை எனக்கு நினைவுப்படுத்துகிறது. இந்த ராகாப் கர்த்தருடைய வல்லமையை அறிந்திருந்தாள் (யோசுவா.2:10,11). கர்த்தருடைய மகத்துவங்களைக் கண்டு அவளுடைய இருதயம் நடுக்கம் கொண்டு கரைந்துபோனது. அவளுடைய தைரியம் அற்றுப்போனது. 'உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர்' என்று கூறினாள். மேலும், தானும் தன்னுடைய குடும்பத்தாரையும் அழிவுக்குத் தப்புவித்துக்கொள்ளும்படிக்கு வேவுகாரரை நோக்கி: "நீங்கள் என் தகப்பனையும் என் தாயையும் என் சகோதரரையும், என் சகோதரிகளையும் அவர்களுக்கு உண்டான எல்லாவற்றையும் உயிரோடே வைத்து, எங்கள் ஜீவனைச் சாவுக்குத் தப்புவிக்கும்படி, எனக்கு நிச்சயமான அடையாளத்தைக் கொடுக்கவேண்டும்' (யோசு.2:13) என்று கேட்டுக்கொண்டு தன்னையும் தன் வீட்டாரையும் தப்புவித்துக் கொண்டாள். ஆம், இந்த லீதியாளுங் கூட தன் வீட்டாரோடு நித்திய அழிவுக்குத் தப்பித்துக் கொள்ளும்படி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டாள். நாமும் இவ்வுலகத்தின் பாவங்களினின்றும், வரப்போகும் நித்திய ஆக்கினையினின்றும் நம்மைக் காப்பாற்றிக் கொள்ளும்படி தேவ நியதிகளை நிறைவேற்ற வேண்டியவர்களாயிருக்கிறோம்.

அடுத்ததாக, இந்த லீதியாள் தேவனுடைய ஊழியர்களாகிய பவுலையும், சீலாவையும் நோக்கி, நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள் என்று வருந்திக்கேட்டுக் கொண்டாள் (அப்.16:15) என வாசிக்கிறோம். அன்பு சகோதரியே, கர்த்தருடைய பணியைச் செய்யும் ஊழியர்களை உங்கள் இல்லங்களில் ஏற்றுக்கொள்ளுகிறீர்களா? அல்லது உங்களுடைய பெரிய பங்களாவிற்கு முன்பாக நாய் ஒன்றை கட்டிப்போட்டு ஒருவரும் உங்கள் இல்லத்திற்குள் பிரவேசிக்க விடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? கர்த்தருடைய பணியைச் செய்கிற எளிமையான ஊழியர்கள் தேவனுடைய பார்வையில் மேன்மையானவர்கள். இவ்வுலகின் உயர்ந்த உத்தியோகத்தில் இருப்பவரிலும் மேலானவர்கள். தேவனுக்குச் சேவை செய்கிறவர். ஆம்! சூனேம் என்ற ஊரிலிருந்த ஒரு கனம் பொருந்திய ஸ்திரீ தேவனுடைய மனுஷனாகிய எலிசாவுக்கு தன்னுடைய மெத்தையின் மேல் ஒரு சிறிய அறைவீட்டைக் கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும் குத்துவிளக்கையும் வைத்து தேவனுடைய ஊழியரை தன்னுடைய வீட்டில் ஏற்றுக்கொண்டாள். அதனிமித்தம் தேவன் அவளை ஆசீர்வதித்து, பிள்ளை இல்லாதிருந்த அவளுக்குக் கர்ப்பத்தின் கனியைக் கொடுத்தார் (2இரா.4:8–17). அன்பு சகோதரியே, இயேசு "சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்.10:42). அநேகர் தேவ ஊழியர்களைக் குறித்து தவறான எண்ணங்கொண்டவர்களாய் அவருக்குச் செலுத்த வேண்டிய கனத்தைச்

செலுத்துவதில்லை 'உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு, அவன் தேவஊழியக்காரனாயிருக்கிறான்' ரோம.13:4 என்ற வசனத்தை மறந்து போகக்கூடாது.

அன்பு சகோதரியே, லீதியாளைப் பற்றிய இந்தப் பாடத்திலே, நாம் அறியவேண்டியவை: அவள் ஐரோப்பாவில் முதலாவது கர்த்தருடைய சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து தன் குடும்பத்தாரோடு இரட்சிக்கப்பட்டாள். அத் தேசத்தில் சுவிசேஷம் பரவ உதவினாள். அவள் தன் பாரம்பரியத்தைப் பாராமல் தேவனுடைய வசனம் கிடைத்தவுடன் தன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டாள், பிறகு தாமதமில்லாமல் வசனத்திற்குக் கீழ்ப்படிந்து தான் மட்டுமல்லாது தன் வீட்டாரோடுங்கூட ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டாள். கடைசியாக தேவஊழியரை தன் வீட்டில் ஏற்றுக்கொண்டாள். இவளுடைய குணங்கள் இவளுக்கு விசேஷித்த மேன்மையைக் கொண்டுவருமல்லவா? நாமும் இவளைப் போல தேவனுடைய விருப்பத்தைச் செய்து விசேஷித்த மேன்மையான நித்திய ஜீவனைப் பெற தேவன் தாமே உதவி செய்வாராக!

**உதடு**


உதடுகளின் மாறுபாட்டை உனக்குத்தூரப்படுத்து--- நீதி.4:24
ஆகாமியம் என் உதடுகளுக்கு அருவருப்பானது --- நீதி.8:7
புத்திமான்களின் உதடுகளில் விளங்குவது ஞானம் --- நீதி.10:13
பகையை மறைக்கிறவன் பொய் உதடன் --- நீதி.10:18
தன் உதடுகளை அடக்குகிறவனோ புத்திமான் --- நீதி10:19
நீதிமானுடைய உதடுகள் அநேகரைப் போஷிக்கும் --- நீதி.10:21
உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம் --- எபி.13:15
அறிவுள்ள உதடுகளோ விலையுயர்ந்த இரத்தினம் --- நீதி.20:15
உன் உதடுகளினால் வஞ்சகம்பேசாதே --- நீதி.24:28
உதடுகளின் மதுரம் கல்வியைப் பெருகப்பண்ணும் --- நீதி.16:21

## திருவாரூர் மாவட்டம் இருபத்தெட்டாவது கிறிஸ்துவின் வசனம் வாசகர் கருத்தரங்கில் கலந்துகொண்டவர்கள்



"...அழைக்கப்பட்டவர்கள் அநேகர் தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர்" (மத்.20:16)

# யார் வேதாகமத்தை வாசிக்கவேண்டும்?
# Who Should Read The Bible?



| | |
|---|---|
| இளைஞர் ------------- | எப்படிவாழ எனக் கற்றுக்கொள்ள |
| வயோதிபர் ------------- | எப்படி மரிக்க என அறிய |
| படிப்பில்லாதோர் ------- | ஞானத்திற்காக |
| படித்தவர் ------------- | தாழ்மைக்காக |
| செல்வந்தர் ------------- | கருணைக்காக |
| ஏழை ------------------ | ஆறுதலுக்காக |
| பெலவீனர் ------------- | பெலத்திற்காக |
| அகந்தையுள்ளோர் ------ | எச்சரிப்புக்காக |
| தாழ்மையுள்ளோர் ------ | உயர்த்தப்படுவதற்காக |
| துன்பப்படுவோர் ------- | சமாதானத்திற்காக |
| சோர்வடைந்தோர் ------ | இளைப்படைவதற்காக |
| சந்தேகிப்போர் --------- | நம்பிக்கைக்காக |
| பாவி ------------------ | இரட்சிப்பிற்காக |
| கிறிஸ்தவன் ------------ | போதிக்கப்படுவதற்காக |

**தெரிந்து கொள்ளுங்கள்**
**ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு**

பிறக்க
இறக்க
நட
நட்டதைப் பிடுங்க
கொல்ல
குணமாக்க
இடிக்க
கட்ட
அழ
நகைக்க
புலம்ப
நடனம்பண்ண
கற்களை எறிந்துவிட
கற்களை சேர்க்க
தழுவ

ஒரு காலமுண்டு


தழுவாமலிருக்க
தேட
இழக்க
காப்பாற்ற
எறிந்து விட
கிழிக்க
தைக்க
மவுனமாயிருக்க
பேச
சிநேகிக்க
பகைக்க
யுத்தம்பண்ண
சமாதானம்பண்ண

## ஆன்மீக ஆலோசனை

"சிலர் இரதங்களைக் குறித்தும், சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள்; நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மைபாராட்டுவோம்" சங்.20:7

# ஜீவ விருட்சத்தின் கனி

*K. Vendas*



அன்பானவர்களே, இறைமைந்தன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் புதுக்கோட்டை டவுன் கிறிஸ்துவின் சபையாரின் வாழ்த்துக்களை சொல்லி உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

"வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து நல் வழி எங்கே என்று பார்த்து அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே.6:16).

சிந்திப்பீர்: முதல் மனிதன் ஆதாமும் அவனுடைய துணை ஏவாளும் மீறுதலுக்கு உள்ளானதினால், ஆதாமும் அவனது சந்ததியும் ஜீவவிருட்சத்தின் கனியை புசிக்கக்கூடாதபடி அதற்குப் போகும் வழியை தேவன் அடைத்தார். அது முதலே மனிதனுடைய ஆத்துமா சமாதானமின்றி, மரண பயத்தினால் அவனை விடுவிப்பார் இல்லாமல் பாவத்தினால் அடிமையாய் இருந்தவேளையில் காலங்காலமாய் இருந்த அந்த மரணபயத்தை நீக்கும்படி இயேசுதாமே, மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து மனுக்குலத்தை மரணபயத்திலிருந்து விடுவித்தார் (எபி.2:15). ஆகவே அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்று அப்.4:12–ல் காணலாம்.

இப்படியிருக்க இயேசுவின் மூலமாகத்தான் ஜீவவிருட்சத்தின் கனியைப் பெற்று முடிவில்லாத வாழ்வாகிய நித்திய ஜீவனை அடைந்து தேவன் வாசம் செய்யும் பரமவாசஸ்தலத்தில் பிரவேசிக்க முடியும். ரிசிகள், முனிவர்கள், தீர்க்கதரிசிகள், மரித்த பரிசுத்தவான்கள், ஏற்கனவே இயேசுவிற்காக ஊழியம் செய்த மகான்கள் போன்றோர் மூலம் மனிதன் பரம தேசத்தை அடைய முடியாது. "நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்திற்கு வரான்" என்றார் இயேசு (யோவான்14:6). ஆகையால், அவரில்லாமல் வேறு வழியில்லை. பிதாவாகிய தேவன் அவரை முன்குறித்திருக்கிறார். இயேசுவையும் அவருடைய உபதேசத்தையும் அறிந்து கொள்ளுங்கள்.

எனவே, ஆத்துமா இளைப்பாறுதல் பெற வழிகளை ஆராயும் போது இயேசுவே வழியென நாம் அறிகிறோம். அந்த இயேசுவின் உபதேச சத்தியத்தின்படி ஒருவர் கீழ்ப்படிந்தால் மட்டுமே, ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன் என்கிறார் (வெளி.2:7). இன்று பல சபைகள் தோன்றி இயேசுவின் போதனைகளை விட்டுவிட்டு மனுஷனுடைய கற்பனைகளை அதிகமாகவும், இயேசுவின் போதனைகளை ஊறுகாயைப் போலவும் பயன்படுத்துகின்றனர். அநேக கள்ள உபதேசங்களால் சத்தியத்தை அறிய

முடியாமல் ஆவியில் மயக்கமான நிலையில் இருக்கின்றனர். எனவே முதலாவது சத்தியத்தையும் அறியுங்கள் அப்பொழுது சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.

நீதியின் மேல் பசிதாகம் உள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் திருப்தியடைவார்கள் (மத்.5:6). நீதியாகிய தேவவசனத்தின் மேல் பசிதாகம் உங்களுக்கு உள்ளதா? அப்படியெனில் கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள். அப்பொழுது மத்7:7–ன்படி உங்களுக்குக் கிடைக்கும். இம்மையிலே அதிகமான வைகளையும் மறுமையிலே நித்திய ஜீவனையும் அடையாமற் போவதில்லை என்று லுக்.18:30–ல் இயேசு சொல்கிறார்.

நீங்கள் தூய சத்தியத்தை அறிந்துகொள்ளவும் மேலும் விபரங்கள் தேவைப்பட்டால் எங்களோடு தொடர்பு கொள்ளவும்.

**ஜெபியுங்கள்**

☆ *திருச்சியில் நடைபெற்ற தமிழக ஊழியர் கூட்டத்தில் கர்த்தர் புதிய எழுப்புதலைக் கொடுத்ததற்காக...*

☆ *28வது வாசகர் கருத்தரங்கை கர்த்தர்ஆசீர்வதித்தமைக்காக...*

☆ *புதிதாக வெளி வந்துள்ள 2005–2006 ரேடியோ மற்றும் டிவி செய்திகள் அடங்கிய புத்தகத்திற்காக...*



## இயேசு

*என்ன கேள்வியானாலும்,*
*அவரே பதிலாயிருக்கிறார் (யோவா.14:6)*
*என்ன பிரச்சனையானாலும்,*
*அவரே பரிகாரி (மத்.11:28,29)*
*என்ன காயமாயிருந்தாலும்,*
*அவரே சுகமாக்குகிறவர் (லுக்.4:18)*
*என்ன அடிமைத்தனமாயிருந்தாலும்,*
*அவரே விடுவிக்கிறவர் (யோவா.8:32)*
*என்ன பாரமாயிருந்தாலும்,*
*அவரே மேற்கொள்ளுகிறவர் (யோவா.16:33)*
*என்ன தேவையாயிருந்தாலும்,*
*அவரே சப்ளையர் (மத்.7:7,8)*
*என்ன பாவமாயிருந்தாலும்,*
*அவரே மன்னிக்கிறவர் (எபி.10:12-17)*

Jesus

**-The Voice of Truth International**

# சத்திய வார்த்தையில் சரித்திரம் -5

சரித்திர ஆய்வு

## பிறக்கப்போகிற மேசியாவைக்குறித்து

## தீர்க்கதரிசனங்களும் அவைகளின் நிறைவேறுதல்களும்

John S.Nathan, Gospel Minister
Christian City Church of Christ, (Minjur) -601 203, S.INDIA.
Mobile: 9841017621



இன்றைய நாளில் இந்தியாவில் காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரையில் மதவாதிகள் தாங்கள் ஆராதிக்கும் கடவுளைக்குறித்து சரித்திர சான்றுகளையும், பூகோள ஆதாரங்களில் ஒன்றாகிலும் கிடைக்குமா என்று ஏங்கி தடுமாறி வருவதால், மக்களினம் வழி வழியாக கொண்டிருந்த மத நம்பிக்கையை மாத்திரம் கூறி மக்களை குழப்பியும், தாங்களும் குழம்பியிருக்கும் நிலையில் இருக்கின்றனர். ஆனால் உலகிலுள்ள எல்லா மதங்களுக்கும் இல்லாத தனி சிறப்பு **கிறிஸ்தவமார்க்கத்திற்கு தான் உண்டு** என்பதை சரித்திர சான்று, பூகோள ஆதாரம், அறிவியல் ஆதாரம், தீர்க்கதரிசன நிறைவேறுதல் ஆகியவைகளைக்கொண்டு இயேசு கிறிஸ்துவின் பிறப்பு 1. ஸ்திரீயின் வித்தாகவும், 2. கன்னியிடம்பிறந்தார் 3. தேவகுமாரன் 4. ஆபிரகாமின் வித்து என்கிற தலைப்பில் கடந்த நாட்களில் கண்டோம். இனி தொடர்ந்து வேதாகமத்தை நன்கு ஆராய்ந்து தெளிவு பெறுவோமாக.

கிறிஸ்தவம் யாராலும் எப்போதும் குற்றம் காணமுடியாத, தெளிவான உண்மை நிறைந்த ஆதாரம் தரக்கூடிய மார்க்கமாகும்.

**5. ஈசாக்கின் குமாரன்; தீர்க்கதரிசன:** காலம் கி.மு.1000 அப்போது தேவன் ஆபிரகாமை நோக்கி அந்தப் பிள்ளையையும் (இஸ்மவேல்) உன் அடிமைப்பெண்ணையும் குறித்துச் சொல்லப்பட்டது உனக்கு துக்கமாயிருக்கவேண்டாம், **ஈசாக்கினிடத்தில்** உன் சந்ததி விளங்கும் என்றார் (ஆதி.21:12).

ஆபிரகாமுக்கு, ஈசாக்கு இஸ்மயேல் என்ற இருகுமாரர்களில் வாக்குதத்தத்தின் மகனான **ஈசாக்கை** தெரிந்து கொண்டு, இஸ்மயேலை புறக்கணித்தது கவனிக்கத்தக்கது, ஏனெனில் இந்த சந்ததியாரால் இரட்சகருக்கும், அவரைப்பின்பற்றக்கூடிய கிறிஸ்தவர்களுக்கும் தொல்லைகள், தீமைகள் பல உண்டு என்பதை அறிக. **நிறைவேறியது:** "இயேசு.... ஈசாக்கின் குமாரன் (இஸ்மயேலின் குமாரன் அல்ல) லூக்.3:34; மத்.1:2.

**6. யாக்கோபின் குமாரன்; தீர்க்கதரிசனம்:** காலம் கி.மு.2000–1400 ஆண்டு அவரைக்காண்பேன், இப்பொழுது அல்ல, அவரைத் தரிசிப்பேன் சமீபமாய் அல்ல, ஒரு

நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும் (ஏசாவிடமிருந்து அல்ல) அதுமோவாபின் எல்லைகளை நொறுக்கி சேத் புத்திரர் எல்லாரையும் நிர்மூலமாக்கும் எண்ணா24:17. **நிறைவேறுதல்:** யாக்கோபு, ஈசாக்கின் குமாரன் லூக்.33:34; 1:33; மத்.1:2 ஏசா, யாக்கோபு ஆகிய ஈசாக்கின் இரு குமாரர்களில், தேவன் யாக்கோபை தெரிந்துகொண்டு ஏசாவை புறக்கணித்தார்.

**7. யூதாகோத்திரம்; தீர்க்கதரிசனம்:** கி.மு735–698 காலத்தில் கூறப்பட்டது சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதில்லை. நியாயப்பிரமாணிகன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை, ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள் (ஆதி.49:10; மீகா.5:2). **நிறைவேறுதல்:** இயேசு... யூதாவின் குமாரன் லூக்.3:26; மத்.1:2.

**8. ஈசாவின் குடும்பவழி; தீர்க்கதரிசன காலம்:** கி.மு 745–680 ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும் ஏசா11:1. **நிறைவேறுதல்:** இயேசு.... ஈசாயின் குமாரன் லூக்.3:32; மத்.1:6.

**9. தாவீதின் வீட்டாரிலிருந்து தீர்க்கதரிசன; காலம்:** கி.மு 627–580 இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார் அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன்; அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரீகம் பண்ணி, பூமியில் நியாயத்தையும், நீதியையும் நடப்பிப்பார் எரே.23:5. **நிறைவேறுதல்:** இயேசு.... தாவீதின் குமாரன் லூக்.3:32; மத்.1:1; 9:27; 15:22; 20:30–31; 21:9,15; 22:41–46 மாற்.9:10,47,48 லூக்.18:38,39; அப்.13:22–23; வெளி22:16 கவனிக்க: ஈசாக்குக்கு குறைந்தது 8 மகன்கள் இருந்தனர், ஆனால் தேவன் அவர்களில் மற்ற 7 பேரை புறக்கணித்துவிட்டு தாவீதை மாத்திரம் தெரிந்து கொண்டார் (1சாமு.16:10,11).

## நடப்புச் செய்திகள்

- 91 கோடி இந்தியர்களின் தின வருமானம் ரூ80 க்கும் கீழ் உள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.
- பள்ளிக்கு செல்போன் கொண்டு வரும் மாணவ, மாணவிகள் தொடர்ந்து அந்த தவறை செய்தால் சஸ்பெண்ட் செய்யப்படுவார்கள் என்று பள்ளிக் கல்வி இயக்குனர் தெ.ஜெகன்னாதன் எச்சரித்துள்ளார்.
- முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான வயது, 65–ல் இருந்து குறைக்கப்படும் என்று அமைச்சர் ஐ.பெரியசாமி தெரிவித்துள்ளார்.
- டெல்லியை சேர்ந்த சுபாஷ்சந்திர அகர்வால் அவரது மனைவி மது அகர்வாலும் சேர்ந்து பத்திரிக்கைகளில் வெளியாகும் ஆசிரியருரைக்கு கடித பகுதிக்கு 4,146 கடிதங்கள் எழுதி, இந்த தம்பதியர் கின்னஸ் சாதனை படைத்துள்ளனர்.

**சிறுவர் பகுதி**

# தந்திரம்

*வேதப்பகுதி: மத்தேயு 4: 1–10*



**ஏமாறிய ஆதாம், ஏவாள்:** தந்திரம் என்றால் சூழ்ச்சி, அல்லது ஏமாற்றுதல் என்று பொருள். பிசாசானவன் தந்திரமுள்ளவன் ஆகையால் ஆதியிலே நம் முற்பிதாக்களாகிய ஆதாமையும் ஏவாளையும் ஏமாற்றினான். "நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ? என்று ஏவாளைப்பார்த்து கேட்டான். அதற்கு ஏமாந்துபோன ஏவாள் நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்; ஆனாலும்,தோட்டத்தின் நடுவிலே இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன், நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார். அதற்கு சர்ப்பம் நீங்கள் சாகவே சாவதில்லை நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றான். இதற்கு கீழ்ப்டிந்து பறித்து புசித்து பாவத்தின்கீழ் தள்ளப்பட்டார்கள்.

**ஏமாறாத கர்த்தர்:** பிசாசு இயேசுவை நோக்கி: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். அவர் அவனுக்கு பிரதியுத்தரமாக; மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார். பின்பு பிசாசு அவரைத் தேவாலயத்து உப்பரிகையின்மேல் நிறுத்தி, நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும் ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான். அதற்கு இயேசு உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார். மறுபடியும் பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்து கொண்டால் இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு அப்பாலே போ சாத்தானே உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். நீங்களும் உங்களை ஏமாற்ற வரும் பிசாசை கர்த்தருடைய வசனத்தைக் கொண்டு எதிர்த்து இயேசுவைப்போல அப்பாலே போ சாத்தானே என்று சொல்வீர்களா?

***மனப்பாட வசனம் : "சாத்தானாலே நாம் மோசம்போகாதபடிக்கு அப்படிச் செய்தேன்; அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே" (2கொரி.2:11)***

## வேத அறிவுப் போட்டி எண்.87

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் **இம்மாதம் 25ம்தேதிக்குள்** எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். **பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.***

1. தேமேத்திரியு எல்லாராலும் நற்சாட்சிபெற்றதுமல்லாமல், எதினாலும் நற்சாட்சிபெற்றவன்?
2. கர்த்தருடைய சொல்லைக்கேளாமல், கொள்ளையின்மேல் பறந்து, கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்த இஸ்ரவேலின் முதல் ராஜா யார்?
3. உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் எவரைத் தரித்துக்கொண்டீர்களே என்று பவுல் எழுதுகிறார்?
4. தன் இனப்பெண்ணுக்கு வறுத்த கோதுமையைக் கொடுத்த ஆஸ்திகாரன் யார்?
5. இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரித்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல், முற்காலங்களில் எவர்களுக்கு அறிவிக்கப்படவில்லை?
6. சிம்சோனின் மகா பலத்தை தெரிந்துகொண்ட வேசியின் பெயர் என்ன?
7. அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன் என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?
8. இஸ்ரவேல் சபையின்மேலெல்லாம் கடுங்கோபம் வர காரணமாயிருந்தவன் யார்?
9. சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் என்ன செய்யப்பட்டிருக்கிறீர்கள்?
10. வெறுங்கையோடே என் சந்நிதியில் ஒருவனும் வரக்கூடாது என்று கர்த்தர் எந்த தீர்க்கனிடத்தில் சொன்னார்?

தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும்
உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும்
கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும்
ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும்,
இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும்
வகையறுக்கிறதாயும் இருக்கிறது (எபிரெயர்4:12)

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5, Rajan Nagar, Batlagundu - 624 202 and Printed by R.Sathiyamoorthi at Bharathi Press,14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202
Editor: B.Arjunan.


R.N.I. No.TNTAM/2000/3629 Postal Registration. No. TN/SR-164/2006-2008 Lincensed to Post without pre-payment License No.TN/WPP-25/SR/2006-2008 Posted at Batlagundu Post Office on 10th November 2007.

**கிறிஸ்துவின் சபையார் வழங்கும் கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சியை**





**உங்கள் வானொலியில்**

இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 வரை கேளுங்கள் மேலும்
கொழும்பு சர்வதேச ஒலிபரப்பு MW 873 khz-இல் மாதத்தின் கடைசி
சனிக்கிழமை காலை 8.50 முதல் 9.05 மணி வரையிலும் கேளுங்கள்




**உங்கள் WIN TV யில்**

ஒவ்வொரு வாரமும் திங்கள் முதல் வெள்ளிவரை
காலை 6.15 முதல் 6.30 மணி வரை பார்த்து
சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்




**மாத இதழ் மற்றும் வேதபாடம்**

தேவைக்கு உடனே எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.





**Radio & TV** -யில் வெளிவந்த தேவ செய்திகள்
அடங்கிய **CD & DVD** -க்கள் விற்பனைக்கு உள்ளது.
தேவைப்படுவோர் எங்களோடு தொடர்புகொள்ளவும்.

*THE WORD OF CHRIST*
*P.O.Box.No.5*
*Batlagundu - 624 202. S. India*

*Phone:04543-263278 Mobile:94435-58041 e.mail:thewordofchrist@sancharnet.in*

**Monthly Magazine**

**To**

*From*

*Editor*
*THE WORD OF CHRIST*
*P.O.Box.No.5*
*Batlagundu - 624 202*
*S. India*